JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.645/2024
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீநித்யா | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | பழனி | தொழில் | தனியார் பள்ளி ஆசிரியை |
| கிராமம் | கல்யாணிபுரம் | வயது | 22 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கல்யாணிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியயார் பள்ளியில் ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் பெரியப்பாவின் மருமகன். அசா.1 மாரியம்மாள் என் அம்மா. சாட்சி சுப்புக்குட்டி என்பவரை தெரியும். கடந்த ஆகஸ்ட் மாதம் 2019 ம் வருடம் என் அம்மாவின் செயினை பீரோவில் வைத்திருந்தார்கள். 9 வது மாதம் விழாவிற்கு செல்வதற்காக செயினை பார்த்த போது செயினை காணவில்லை. செயின் 32 கிராம் ஆகும். அதன் மதிப்பு ரூ.1 லட்சம் ஆகும். பின்னர் என் அம்மா காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். சிறிது நாட்கள் கழித்து செயின் கிடைத்து விட்டதாக போலிசார் தகவல் சொன்னார்கள். நீதிமன்றத்தில் இடைக்காலமாக மனு தாக்கல்செய்து என் அம்மா செயினை திரும்ப பெற்று கொண்டார். செயினை திருடியது ஆஜர் எதிரி என போலிசார் சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.645/2024
PW.1

| பெயர் | மாரியம்மாள் | தாலுகா | தென்காசி |
|---|---|---|---|
| கணவர் பெயர் | பழனி | தொழில் | சத்துணவு அமைப்பாளர் |
| கிராமம் | கல்யாணிபுரம் | வயது | 48 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 26.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கல்யாணிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் சத்துணவு அமைப்பாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் அத்தானின் மருமகன். சாட்சிகள் ஸ்ரீநித்யா, சுப்புக்குட்டி ஆகியோர்களை தெரியும். கடந்த 26.08.2019 ம் தேதி என்னுடைய செயின் காணாமல் போய்விட்டது. என்னுடைய 32 கிராம் தங்க செயினை பீரோவிற்குள் ஒரு பர்சில் வைத்திருந்தேன். 9 வது மாதம் நான் என்னுடைய செயினை திருமண வீட்டிற்கு செல்வதற்காக எடுத்து பார்த்த போது செயின் காணவில்லை. அதன் மதிப்பு ரூ.1 லட்சம் ஆகும். பின்னர் சம்பவத்தின் மீது நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் .அதில் இருக்கும் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 1 மாதம் கழித்து போலிசார் செயின் கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள். பின்னர் காணாமல் போன என்னுடைய தங்க செயினை அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இடைக்காலமாக மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் நான் நீதிமன்றத்திலிருந்து திரும்ப பெற்று கொண்டது. மேற்படி புகைப்படம்அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. செயினை ஆஜர் எதிரி தான் திருடினார் என போலிசார் தகவல் சொன்னார்கள். தற்போது என் குடும்ப தேவைக்காக செயினை

அடகு வைத்துள்ளேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi